★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 9உ செவ்வாய் (22—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 10உ புதன் (23—5—56) [இதழ் 201

பறக்கும் தட்டுகள்!

பறக்கும் தட்டுகள் குறித்த அரசாங்கத்திற்கு ஒரு தகவலும் வரவில்லை யென்றும், ஆனால் பறக்கும் தட்டுகளைப் பற்றிச் செய்தித்தாள்களில் வந்த செய்திகளை அரசாங்கம் பார்வையிட்டதென்றும், பறக்கும் தட்டுகள் குறித்து, மக்கள் சபையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு மந்திரி கே. டி. மாளவியா பதிலளித்துள்ளார்.

'இதைப்பற்றி விசாரணை நடத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது?' என்று கேட்ட கேள்விக்கு மந்திரி பதிலளிக்கையில், விசாரணை நடத்துவது தகுதியுடையதாகாது' என்று குறிப்பிட்டார்.

தாயகத்தை மீட்க! திராவிடருக்கு நல்வாழ்வு தர!

உலக வரலாறுகளின் இலட்சியக் கருத்துக்கள்

மாநில மாநாட்டில் முன்னணி வீரர்களின் முழக்கம்

மாநில மாநாட்டின் பின்னிரு நாட்களும், முன்னிரு நாட்களை விடச் சீரும் சிறப்பும் மிக்கதாய் அமைந்திருந்தன.

18-ந் தேதி இரவு பெய்த பெருமழையையும் பொருட்படுத்தாது, மக்கள் வெள்ளம், வள்ளுவர் நகரை நிரப்பிவிட்டிருந்தது. இந்த இரு நாட்களிலும், மேலும் மக்கள் எண்ணிக்கை, முன்னிரு நாட்களை விட ஒரு இலட்சம்வரை அதிகரித்திருந்தது.

19-ந் தேதி காலையில், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களின் கருத்துமிக்க தலைமைப் பேருரையைக் கேட்டுவிட்டு, இடைவேளைக்காகக் கலைந்து சென்ற மக்கள், பொதுச்செயலாளர், தலைமைப் பேருரையில் அளித்த கருத்து விருந்தினை ஜீரணிப்பதில் முனைந்திருந்ததால், பகல் உணவு நேரம் கழிந்ததையும்கூட கவனித்தார்கள் இல்லை. மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று, பொதுச்செயலாளரின் தலைமையுரையில், நிரம்பி வழிந்த கருத்துக்களையும், அவர் அவற்றை விளக்க மேற்கொண்ட எளிய—ஆனால், வீரமிக்க முறையையும், அவர் கருத்துரையை ஊன்றிக் கேட்பதில் தாங்கள் காட்டிய ஆர்வத்தையும் குறித்து உரையாடிக்கொண்டே இருந்தனர்.

அவரது தலைமை உரை, நாட்டவரை நல்வழி இழுத்துச் செல்ல, எத்தனை வலிமை படைத்தது என்பதை எண்ணியபோது, கழகத் தோழர்கள், மகிழ்ச்சியால் தங்களை மறந்திருந்தனர்.

பொதுசெயலாளரின் தலைமையுரைக் கருத்துக்களை நினைவில் கொண்டுவந்து, அவற்றைத் தொகுத்து, மீண்டும் சிந்தித்துச் சுவைததுக் கொண்டிருந்த மக்கள், மாலை நிகழ்ச்சிகள் துவங்கிவிட்டன என்ற அறிவிப்பைக் கேட்டனர்.

அப்போது மணி பிற்பகல் 2-45.

துவக்கத்தில் மதுரை மாவட்டத் தோழர்கள் காவிரிப்பிச்சை, சி. ஆர். சௌந்திரராசன் ஆகியோர் தம் தம் குழுவினருடன் இன்னிசை விருந்து வழங்கினர். அவர்களது இசை, கழக இலட்சியங்களையும், கொள்கைகளையும் முழங்கின.

சரியாக 3-35 மணிக்கு தோழர் க. அன்பழகன் அவர்கள், 'இலகியத்தில் அரசியல் கருத்துக்கள்' என்ற தலைப்பில் பேருரை ஆற்றுவார் என்று தலைவர் அறிவித்தார்.

தோழர் அன்பழகன், பழந்தமிழ் இலக்கியங்களை மக்கள் முன் நிறுத்தி, அவற்றில் காணப்படும் அரசியல் கருத்துக்களை ஆராய்ந்து பயன்மிக்கதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அடுத்து தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் அவர்கள் 'தொழிலியல் புரட்சி' என்ற தலைப்பில், தொழிற் புரட்சி, மேலை நாடுகளுக்கு அவைகள் ஏகாதிபத்தியமாக வளருவதற்கு மட்டுமின்றி அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பகுத்தறிவு வளரவும் எவ்வளவோ பயன்பட்டது என்பதை எடுத்துக் கூறி, இந்தியத் துணைக் கண்டத்தில், வடநாட்டில் மட்டுமே தொழிற் புரட்சி ஏற்பட வழி செய்யப்படுவதை எடுத்துக் காட்டி, தென்னாட்டில் தொழிற் புரட்சி ஏற்பட திராவிட நாடு தனிநாடாக வேண்டுமென்பதை விளககிப் பேசினர்.

தோழர் கே. ஏ. மதியழகன், இன்று உலகில் 'விடுதலைக் கிளர்ச்சிகள்' நடைபெறும் நாடுகள் பலவற்றைச் சுட்டிக் காட்டி, அந்த நாடுகளின் விடுதலைக் கிளர்ச்சிகள், திராவிடத்தின் விடுதலைக்காகப் பாடுபடும் நமக்கு நல்ல உணர்ச்சியையும், ஊக்கத்தையும் தருவதை எடுத்துரைத்தார்.

'உரிமைக் கிளர்ச்சிகள்' என் என்ற கேள்விக்கு, விளக்கமிக்கதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர், தோழியர் அருண்மொழி.

இந்திய அரசியலில் அதிகமாக அடிபடும் சொல்லான 'ஜனநாயகம்' பற்றி தோழர் கி. மனோகரன் நிகழ்த்திய சொற்பொழிவு, ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சியாளர்களாகியிருக்கும்காங்கிரசாருக்கு விழிப்பு உண்டாக்கும் ஆற்றல் பெற்றதாயிருந்தது.

'உலகைத திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில் பேசிய தோழர் அரங்கண்ணால், உலகம் பற்றி ஒரு காலத்தில் நிலவிய கருத்தையும், அந்தக் கருத்தைத் தவறென்று திருத்தி, சரியான விளக்கம் தந்த உத்தமர் பட்டபாட்டினையும் விளக்கினர். உலகம் என்றால் என்ன? உத்தமர்கள் என்போர் எவர்? என்பதை எல்லாம் அவர் விரிவாக விளக்கினர்.

'தாய்க்குல வரலாறு' என்ற தலைப்பில் பேசிய தோழியர் சத்தியவாணிமுத்து, 'தாய்—தந்தை இவரில் எவர் பெரியவர்?' என்ற ஒரு 'சண்டை'யையே துவக்கி வைத்துவிட்டார். தாய்க்குலம், ஒரு காலத்தே பெற்றிருந்த உரிமையையும், இடைக் காலத்தில் அதனை இழந்துவிட்டதையும், இப்போது அந்த உரிமை தாய்க்குலத்திற்குத் தரப்படவேண்டிய அவசியம் குறித்தும் விளக்கினர்.

அடுத்து 'மொழிப் பிரச்சினை'களை அலசி, தாய்மொழி காக்க வீரர்களைத் தயார் செய்தார், தோழர் கண்ணதாசன். மொழி என்னும் போது, தமிழ் மொழியுடன் ஒப்பிட்டுப் பேச இந்தி எந்த வகையாலும் அருகதை அற்றது என்பதை அவர் விளக்கிய முறை, சிறப்பாயிருந்தது.

'தத்துவ வரலாறு' என்ற பெருங்கடலில் நீந்தி, அரிய தத்துவ விளக்கங்களைத் தந்தார், தோழர் டி. கே சீனிவாசன்.

'வேகமாக ஓடுகிற இரயிலிலிருந்துகொண்டு, கடந்து செல்லும் இரயில் நிற்காத நிலையங்களைச் சுட்டிக் காட்டுவதுபோல', தத்துவங்களின் சாரங்களை அவர் தொட்டுக் காட்டினர்.

'தத்துவம் என்றால் உண்மை' என்பதை அவர் விளக்கி, மேலை நாட்டுத் தத்துவங்களுக்கும்—கீழ் நாட்டுத் தத்துவங்களுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை விளக்கிக் காட்டி அரியதோர் கருத்துரை வழங்கினர்.

அடுத்து, தோழர் மு. கருணநிதி, 'திராவிடத்தின் உலகத் தொடர்பு'களை விளககிப் பேசினா. அந்த விளக்கத்தில், பழங்காலத்தில் திராவிடம், உலகத்துடன் நாகரீகம், கலை, வாணிபம் முதலிய துறைகளில் கொண்டிருந்த தொடர்புகள் இடம் பெற்றிருந்தன.

அத்துடன், மாநாடு இரவு இடைவேளைக்காகக் கலைந்தது.

பின்னர், இரவு 11 மணி அளவில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் 'அட்வகேட் அமரன்' என்ற நாடகம் சிறப்பாக நடைபெற்றது. எண்ணற்ற தாய்மார்கள் உட்பட இரண்டு இலட்சம் மக்கள் நாடகத்தைக் கண்டு களித்தனர்.

திண்தோள் வீரருக்கு அன்பழைப்பு!

கண்ணீரோடு பிறந்த கழகம் எதிர்ப்புக்கு இடையே ஓங்கி வளர்ந்துள்ள வரலாறு

6 ஆண்டுகளில் கழகத்தின் மகத்தான சாதனைகள்

மாநில மாநாட்டுத் தலைவர் தீட்டிய வீரகாவியம்

'தம்பி வா! தலைமை ஏற்று நடத்த வா! உனது, ஆணைக்கு கீழ்ப்படிந்து நடக்க உறுதி கூறுகிறோம்! தலைமை தாங்க வா!' என்ற அண்ணாவின் மணிவாசகங்கள், கூடியிருந்த இலட்சோப இலட்சம் மக்களின் உள்ளத்தில் தோற்றுவித்த மகிழ்ச்சிப் பெருக்கு—பெருக்கெடுத்தோடச் செய்த உணர்ச்சி வெள்ளம்—தூண்டிவிட்ட ஆவல்—இத்தனைக்கும் இடையே, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சொற்பொழிவு மேடையை அடைந்தபோது, மக்கள் வழங்கிய வாழ்த்துக்களுக்குக் கைகூப்பி நன்றி தெரிவித்துவிட்டு, திராவிடப் பெருங்குடி மக்களுக்கு வழிகாட்டும் தலைமைப் பேருரையை நிகழ்த்தத் துவங்கினர்.

தொல்லைகள் பலவற்றிற்கிடையே, போர்க்களத்தில் கூடி நிற்கும் வீரம்கொள் கூட்டத்தை நோக்கி, படைத்தலைவர் போர் நிலை குறித்து, விளக்கம் தரும் காட்சிபோல் அமைந்திருந்தது— பொதுச்செயலாளர், தலைமையுரையைத் துவக்கிய காட்சி!

கல்லும் முள்ளும், பாம்பும் பூச்சியும் மிகுந்துகிடந்த பொட்டல் காடு, எழிலும பொலிவும் மிகுந்த 'வள்ளுவர் நகராக' ஆக்கப்பட்டு, அங்கு குழுமியிருந்த, தாயகப் பற்றுக்கொண்ட மக்களிடை பொதுச்செயலாளர் தலைமை உரை ஆற்றிய காட்சி, நினைத்து நினைத்து மகிழுதற்குரியதாகும்.

'அரிமா நோக்கு' என்று, அவர், மாநில மாநாட்டிற்கு விளக்கம் தந்திருந்தார், முன்பு! அந்த அரிமா நோக்கிற்கு ஒரு அரிய படப்பிடிப்பாய் அமைந்திருந்தது, அவரது தலைமை உரை!

சென்ற மாநில மாநாட்டிலிருந்து இந்த மாநில மாநாடு வரை, கழகத்தின் நடவடிக்கைகளை அடுக்கடுக்காக எடுத்துரைத்து, இந்த மாநில மாநாடு கூடும் நேரத்தில், நாட்டு மக்களின் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும பிரச்சினைகள் மீது வெளிச்சம் வீசித் தெளிவாக்கி, எதிர்காலத்தில் கழகம் ஆற்றவேண்டியுள்ள பெரும் பணியினையும் சுட்டிக்காட்டி, 'அரிமா நோக்கு' என்பதற்கு, சொல்லோவியம் தீட்டினர்; பொதுச்செயலாளர்!

"கடந்த ஆறு ஆண்டுக்காலத்தில், கழகத்தின் நடவடிக்கைகளில் ஈடுபட்டு கஷ்டநஷ்டங்களையும், தொல்லைகளையும் ஏற்றுக்கொண்டவர்களுக்கும், நாட்டு விடுதலைக்காக நடந்த போராட்டங்களில் உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கும், வீரவணக்கம் செலுத்துகிறது கழகம்"

என்று அவர் கூறியபோது, மக்கள் உணர்ச்சிமேலீட்டால் மெய்மறந்து நின்றனர். உள்ளத்தை உருக்கிற்று, பொதுச்செயலாளரின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்த உணர்ச்சியின் விளைவான அந்த வாசகங்கள்!

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டம், ஈடுபட்ட இந்தி அழிப்புப் போராட்டம், கைத்தறியாளர் துயர்துடைக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கை, புயல் வீசியதால் திக்கற்றுப் போன மக்களுக்கு நிவாரணமளிக்க கழகம் மேற்கொண்ட சீரிய தொண்டு, மொழிவழி மாநிலம்கோரி, கூட்டணியில் ஈடுபட்டுச் செய்த அரும்பெரும் பணி, இவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக, பாமரருக்கும் புரியும் வண்ணம், தமக்கே உரித்தான பாணியில், எளிய—இனிய தீந்தமிழ்ச் சொற்களால் விளக்கிக் காட்டிவிட்டு, இந்தப் பணிகளில் ஈடுபட்டபோதும், இன்ன பிற நேரங்களிலும 'கழகத்தை ஒழித்து விடுவேன்' என்ற 'சர்ஜனை'யோடு எதிர்ப்புகளைத் துவக்கியவர்கள் பற்றியும், அந்த எதிர்ப்புகளைத் தாங்கிக் கொண்ட கழக வீரர்களின் ஆற்றல் குறித்தும, எதிர்ப்புகள் வளர வளர கழகம் மேலும் ஓங்கி வளர்ந்திருக்கும் நிலைகுறித்தும் விளக்கினர்.

இந்த ஆறுண்டுக்காலத்தில், திராவிடரின் பிறவிப் பகையாளர்களான வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் போக்கு குறித்தும், அவர்கள் தென்னாட்டின்மீது கொண்டுள்ள ஆதிக்கப் பிடிப்பை வலுப்படுத்த மேற்கொண்டுள்ள முயற்சிகளின் நிலை தன்மை குறித்தும் விளக்கம் தந்தார் பொதுச்செயலாளர்.

(4-ம் பக்கம் பார்க்க)

மலேயாவில் தமிழ் மொழிப் போதனை

கோலாலம்பூர், மே 20—மலாயா மொழியும், ஆங்கில மொழியும் மலாயா நாட்டில் உள்ள ஆரம்ப - உயர்தரப் பள்ளிகளில் கட்டாயப் பாடங்களாகவும், தேவைப்படும் இடங்களில் தமிழும், சீன தேசிய மொழியிலும் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் மலாயா அரசாங்கம் அமைத்த கல்விக் குழு முடிவு செய்துள்ளது.

குறிப்பிட்ட ஆடைகளையே அணிகின்றனராம்!

புதுடில்லி, மே 21—'மத்திய அரசாங்கத்தில் அலுவல் பார்ப்போர், குறிப்பிட்ட ஆடைகளையே அணிந்துகொள்ள வேண்டுமென்று அரசாங்கம் கூறிய ஆலோசனையை ஏற்று, அவர்கள் அனைவரும் குறிப்பிட்ட மாதிரியான ஆடைகளையே அணிகின்றனர்' என்று மக்கள் சபையில் உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் அறிவித்தார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—5—'56 செவ்வாய்

முனைந்து தொண்டாற்றுக!

திருச்சிராப்பள்ளியில்நான்கு நாட்களாக நடைபெற்று முடிவு பெற்ற தி. மு. கழக மாநில மாநாட்டில், திராவிட நாட்டின்—திராவிட மக்களின் உயர்வு கருதிய தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் என்னும் தீர்மானமும் சிறப்பாக நிறைவேறியுள்ளது.

தேர்தலில் கலந்துகொள்வதா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் பொறுப்பு மாநாட்டில் கலந்துகொண்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மாநாட்டுப் பந்தலுக்குள் போவதற்கான நுழைவுச்சீட்டுவைத்திருந்தவர்கள், வாக்குச் சீட்டுப் பெற்றுத் தங்கள் கருத்தைக் குறித்து அதற்கெனத் தனியே வைத்திருந்த பெட்டியில் இட்டனர். இவ்வாறாக, மாநாட்டிற்கு வந்திருந்த மக்களுள் 56,942 பேர் தேர்தலில் கலந்துகொள்வதை ஆதரித்திருந்தனர்; 4,203 பேர் எதிர்த்து வாக்களித்திருந்தனர். எனவே, மிகப் பெரும்பான்மையோர் 93·1 சதவிகிதத்தினர் தி. மு. கழகம் தேர்தலில் கலந்து அரசியல் தொண்டாற்ற வேண்டுமென்று முடிவு செய்திருக்கின்றனர்.

அரசியலில் நேரடியான தொடர்பு கொள்ளுவதற்கு, நம் கழகம் தேர்தலில் கலந்து கொள்வது இன்றியமையாததேயாகும். இத்துறையில் நம் கழக மாநில மாநாடு காலமறிந்து அளித்திருக்கும்தீர்ப்புப் பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

தேர்தலில் கலந்துகொள்வதற்கு முன்னர் நாம் கவனித்துச் செய்யவேண்டிய வேலைகள் பல உள. இதுவரை வாக்காளர்ப் பதிவுக் காலங்களில் தம்மை வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்ற அக்கறை நம்மில் பலருக்கு இல்லையென்றே சொல்லலாம். நூறுயிரக்கணக்கில் இருக்கும் நம் கழகத் தோழர்கள் அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்துகொண்டார்களா என்பது ஐயத்திற்குரியதே! இப்போது நம் கழகமே நேரிடையாகத் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு செய்துவிட்டது. எனவே, இதுவரையில் தம்மை வாக்காளர்ப்பட்டியலில் சேர்த்துக்கொள்ள அக்கறை காட்டாதவர்கள் உடனடியாக விரைந்து தங்களை வாக்காளர்களாக ஆக்கிக்கொள்ள ஆவன செய்தல் வேண்டுமென்பது நம விருப்பமாகும்.

கழக உறுப்பினர்களில் வயது வந்தோர் அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்து கொள்வது மாத்திரமன்றி மற்றவர்களையும் பதிவு செய்து கொள்ளுமாறு தூண்டுதலும வேண்டும். இவ்வேலையை இன்று முதலே துவங்கிவிடுதல் சாலச்சிறந்ததாகும். வாக்காளர் ஆவதற்குரிய வயதைப் பெற்றிருந்தும் வாக்காளராகாமல் இருப்பது நகைப்பிற்கிடமளிக்கும்.

நம் உரிமையை—நம் குறிக்கோளை நிலைநாட்டுவதற்கு வழிகோலும் ஒரே ஒரு வழி, தேர்தலில் நம் கருத்தைத் தக்கவர்கட்கு—நம் குறிக்கோளை நிறைவேற்றுவதையே இலட்சியமாக்கொண்டவர்களுக்கு, நமக்குரிய வாக்குரிமையை வழங்குவதுதான்; இவ்வாய்ப்பினை இழத்தல் கூடாது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

எனவே, நம் இல்லங்களில், சுற்றுவட்டாரங்களில் வாக்காளராகும் உரிமையுடைய ஆடவர், பெண்டிர் அனைவரையும் வாக்காளராக்கும் நற்பணியில் நம் கழகத்தவர் ஈடுபடுவார்களாக!

தி. மு. கழகத்தில் நேரடியாகக் கலந்துகொள்ள முடியாமல், ஆனால் தி. மு. கழகம் செய்துவரும் நற்பணிகளையெல்லாம் ஆழ்ந்து கவனித்துப் பாராட்டி ஆதரவு காட்டிவரும் மக்கள், நூறுயிரக்கணக்கில் உள்ளனர்; அவர்கள் அனைவரையும் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளுமாறு தூண்டுதலும் நம் கழகத் தோழர்களின் இன்றியமையாத செயலாகும்.

ஏற்கனவே இருந்துவந்த வாக்காளர்ப் பட்டியலில், பல்லாண்டுகளுக்கு முன்னர் இறந்துபோனவர்கள், ஊரைவிட்டு வெளியேறியவர்கள், இடம் மாறியவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. அதனால், முன்னால் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும், நகரசபைத் தேர்தல்களிலும் இறந்துபோனவர்களின் பெயரைச் சொல்லி ஒட்டுப் போடுவது, ஊரைவிட்டே வெளியேறியவர்கள் பெயரைச் சொல்லி ஒட்டுப் போடுவது முதலிய தில்லுமுல்லுகள் அளவுகடந்து நடைபெற்றன.

நல்லவேளையாக இப்போது வாக்காளர்ப்பட்டியல்புதுப்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால், வாக்காளர்ப் பட்டியலைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டவர்கள் தம் கடமையைச் செவ்வனே செய்கின்றார்களா என்பது ஐயத்திற்குரியது. இப்பணியில ஈடுபடுபவர்கள், வாக்காளர்ப் பட்டியலைப்புதுப்பிப்பதற்காக வீடுதோறும் செல்கின்றனர். சில வீடுகளில் உள்ளோர் வீடுகளைப் பூட்டிவிட்டுத் தம் உறவினர் இல்லங்களுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ சென்று இருப்பர்; உடனே பதிவு செய்யச் சென்றவர்கள் அவ்வீடுகளில் இருந்தவர்கள் ஊரைவிட்டே வெளியேறி விட்டனர் என்று பழைய வாக்காளர்ப் பட்டியலிலிருந்து அவ்வீட்டினரின்பெயர்களையே எடுத்துவிடுகின்றனர்.

பதிவு செய்வதற்குச் செல்வோர் ஒரு குறிப்பிட்ட கட்சியை (?) ஆதரிப்பவராக இருந்தால், அக்கட்சிக்கு மாறுபட்ட கருத்துடையவர்கள் இல்லங்களுக்குச் செல்லாமலேயே அவர்களுடைய பெயர்களை வாக்காளர்ப் பட்டியலிலிருந்து எடுத்துவிடுவதாகவும் சொல்லப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களின்போது நகரசபைகளுக்குமுறையாக வரி செலுத்தி வருபவர்களும், ஏற்கனவே வாக்காளர்ப்பட்டியலில் பதிவுசெய்யப்பட்டு இருந்தவர்களுமான பலருடைய பெயர்கள் வாக்காளர்ப் பட்டியலைவிட்டு மாயமாய் மறைந்துபோயிருந்தன. இதனாலேயே கடந்த நகரசபைத் தேர்தல்களில் போட்டியிட வேண்டுமென்று முன்வந்தவர்கள் சிலர், தேர்தலில் போட்டியிடும் தகுதியையே இழந்துவிட்டனர்.

சில வீடுகளில் குடியிருந்தவர்கள் அவ்வீடுகளை விட்டுக் காலி செய்திருப்பர். வாக்காளர்ப் பட்டியலைப் புதுப்பிக்கச் செல்வோரின் கவலையின்மையின் காரணமாகவோ அல்லது வேறு காரணமாகவோ அவர்களின் பெயர்கள் வாக்காளர்ப் பட்டியலிலிருந்து எடுக்கப்படுவதில்லை.

இப்படிப்பட்ட தகாதசெயல்கள் நடைபெறாதவண்ணம் கண்காணிக்க வேண்டுவது பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் கடமையாகும் என்பதை நாம் கூறத்தேவையில்லையல்லவா?

எனவே, நம் கழகத் தோழர்கள் வாக்காளர்ப் பதிவு நடைபெறும்போது, விழிப்புணர்ச்சியோடு இருத்தல் வேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

மேலும், வாக்காளர்ப் பட்டியல் புதுப்பிக்கும் வேலை பெரும்பாலும் முடிவடையும் கட்டத்தில் உள்ளது. இப்போதும் பலர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளத் தவறியிருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக எழுதித் தங்கள் பெயர்கள் வாக்காளர்ப் பட்டியலில் இடம் பெறுமாறு செய்துகொள்ள வேண்டும்.

வாக்காளர்ப் பட்டியல், முறைப்படி ஒழுங்கு செய்யப்பட்ட பிறகுங்கூட அடுத்த தேர்தல் நடைபெறும் காலத்திற்குள் சிலர் இறந்துவிடக்கூடும்; சிலர் இடம் மாறிவிடக்கூடும். ஆனால் வட்டாரந்தோறும் இத்தகைய இறப்புகளையும், இடமாற்றங்களையும் குறித்து வைத்துக்கொண்டு, தேர்தல் காலங்களில் அவ்வவ் வட்டாரங்களில் தேர்தல் நடத்தும் அதிகாரிகளாகச் செல்பவர்களிடம் அக்குறிப்பைக் கொடுத்தனுப்ப அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமாயின் தில்லுமுல்லுகள் நடைபெறுவதற்கு வழியேற்படாமல் போகலாம்.

தேர்தல் நடைபெறவிருக்கும நாளைக்கு ஒரு வாரத்திற்கு முன்னர், மக்கள் தொகையைக் கணக்கெடுப்பது போன்று ஒரே நாளில் எல்லா வட்டாரங்களிலும் இந்தக் கணக்கை எடுத்துவிட்டால், இதன் மூலமாகவும், பொய் வாக்குகள் பதியும் வேலையைத் தடுத்து நிறுத்திவிடலாம்.

எனவே, வரப்போகும் தேர்தலில் பொய் வாக்குகள் பதியும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வேலையை நாம் முனைந்து செய்தல் வேண்டும். தேர்தலில், இத்தகைய திருவிளையாடல்களியற்றி வெற்றி பெறும் எண்ணத்தை அடியோடு ஒழிப்பதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே நாம செய்து ஆக வேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் முன்கூட்டிச் செய்தான பிறகு மக்களுக்கு, நம் எண்ணத்தை, நம கொள்கையை, நாம கருதியுள்ள முன்னேற்றத் திட்டங்களை, நாம் இதுகாறும் ஆற்றி வந்துள்ள வேலைகளை, நாம இதுவரை தேர்தலில் கலந்து கொள்ள விரும்பாமல் ஒதுங்கியிருந்ததன் காரணத்தை, இப்போது நாம் தேர்தலில் கலந்து கொள்ள முடிவு செய்திருப்பதன் கருத்தைத் தெள்ளத் தெளிய எடுத்து விளக்கும் வேலையைக் கட்டுப்பாடான—ஒழுங்கான முறையில் செய்து வருதல் வேண்டும். இதற்கான திட்டங்களை நம் தலைவர்கள் வகுப்பார்கள்.

ஆக, முன்கூட்டிச் செய்ய வேண்டிய முதல் வேலைகள் யாவற்றையும் செய்து முடித்து வைத்தோமானால் தேர்தலில் நம் கழகத்தினர் வெற்றி பெறுதல் உறுதி. நயவஞ்சகமும், சதியும், சூழ்ச்சியும் சதிராட இடங்கொடாமல் தடை செய்துவிட்டால், அதற்கான வேலையை ஒழுங்காகச் செய்து வைத்தால் தேர்தலில் தி. மு. க. தோழர்கள் முழுவெற்றியடைவது உறுதியென்பதை ஒவ்வொருவரும் மனத்திற் பதித்துத் தேர்தலுக்கு முன்கூட்டிச் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் முனைந்து செய்ய முன்வர வேண்டுகிறோம்.

'குடும்பக் கட்டுப்பாடு வேண்டும்' என்று கூறுகையில் குழப்பம்

என். ஜி. ஓ. மாநாட்டுத் தீர்மானங்கள்

'கெஜட் பதிவு பெறாத ஊழியர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும்' என்று கல்வி இலாகா காரியதரிசி திரு ஆர். ஏ. கோபாலசாமி சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கெஜட் பதிவாகாத உத்தியோகஸ்தர்களின் 34-வது மாநில மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அப்போது மாநாட்டுப் பிரதிநிதிகள், 'குடும்பக்கட்டுப்பாடு செய்வதற்கு நாங்கள் தயாராகவில்லை' என்று கூக்குரலிட்டனர்; அதன் காரணமாக மாநாட்டில் குழப்பம் ஏற்பட்டது.

உடனே மாநாட்டுத் திறப்பாளர், தமது திறப்புரையைத் திடீரென்று முடித்துக்கொண்டு உட்காரவேண்டியதாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டிற்குக் கோவை திரு எம். லூர்துசாமி தலைமை வகித்தார். திரு எம். ஜம்புலிங்கம் வரவேற்புக் கழகத் தலைவராக இருந்தார்.

இம்மாநில கெஜட் பதிவாகாத ஊழியர்களுக்கு மத்திய அரசாங்க கெஜட் பதிவாகாத ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவது போலவே சம்பள விகிதமும், பஞ்சப்படியும் கொடுக்கப்பட வேண்டுமென்று மாநாட்டில் வற்புறுத்தப்பட்டது.

என். ஜி ஓ-க்களின் குழந்தைகட்கு எஸ். எஸ். எல். சி. வரையில் இலவசமாகக் கல்வி கற்க வசதிகள் செய்துதரப் படவேண்டுமென்றும், தேர்வு எதுவுமின்றி அவர்களின் பிள்ளைகள் அரசாங்க வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் மாநாட்டில் வற்புறுத்திக் கேட்கப்பட்டது.

ஆண்டுக்கொருமுறை குடும்ப நலனுக்காக போனஸ் தரப்பட வேண்டுமென்றும், வீடுபோன்ற சொத்துக்கள் வாங்க நீண்டகாலக் கடன் திட்டம் அமுல் செய்யப்பட வேண்டுமென்றும், அரசாங்க ஊழியர்களின் விதவைகளுக்கு உபகாரச் சம்பளம் ஆயுட்காலம் வரையில் வழங்கப்பட வேண்டுமென்றும், சட்டசபையில் பிரதிநிதித்துவம் தரப்படவேண்டுமென்றும், மேற்கொண்டு செய்யப்படும் வேலைக்கு உபரிதொகை தரப்பட வேண்டுமென்றும் கேட்கப் பட்டது.

வீட்டு வசதி, விடுமுறை வசதி முதலியவைகள் பற்றியும் கோரிக்கைகள் விடப்பட்டன. இரகசிய நடத்தைக் குறிப்பு முறையை மாற்றிப் பகிரங்க முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளப்பட்டது.

கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றி வைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையானால், 1956-ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாவது அலுவல் தேதியன்று சம்பளங்களைப் பெற மறுக்க வேண்டும்;

16—7—56-க்கு முன் வாக்கெடுப்பு நடத்தி ஆகஸ்டு மாதத்தில் ஒருமணி நேர அடையாள வேலை நிறுத்தம் நடத்த வேண்டும்; அதன் பிறகு மத்தியக் குழு குறிப்பிடும் ஒரு நாளில், ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியுள்ளது.

சில கட்டுப்பாடுகளையும் பொருட்படுத்தாமல் மேல்சபைத் தலைவரையும், சட்டசபை சபாநாயகரையும், சட்டசபை உறுப்பினர்களையும் சந்தித்து அரசியல் சட்டம் 309 பிரிவின்கீழ் என். ஜி. ஓ-க்களின் கோரிக்கைகளுக்குச் சட்டசபையில் ஆதரவு தேடவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தியப் பிரதம மந்திரிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தங்களுடைய கோரிக்கைகளை ஆதரிக்கும் கட்சி அல்லது அபேட்சகர்களை அடுத்த பொதுத் தேர்தலில் ஆதரிப்பதெனவும், அவர்களுக்குத் தங்கள் வாக்குரிமையைக் கொடுப்பது எனவும் இம்மாநில என்.ஜி.ஓ.-க்கள் முடிவு செய்ய வேண்டுமென்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேறியது.

எவ்வளவு தெரியுமா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வே முன்னேற்றத் துக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1,125 கோடியில், ஆண்டுக்கு ரூ. 18-கோடி நடைமுதல் நிதிக்கும், ரூ. 33 கோடி 1957—58-ம் ஆண்டுக்கும் தென்பகுதி இரயில்வேக்குக் கிடைக்குமாம்.

அடுத்த திட்டத்தில் தென்னிந்திய இரயில்வேயிக்கு ரூ. 97 கோடி ('ரோலிங் ஸ்டாக்' செலவு தவிர்த்த) கிடைக்குமென மதிப்பிட்டுள்ளதாம்.

தாம்பரம் - விழுப்புரம் மின்சார இரயில் பாதை ரூ. 3·68 கோடியில் அமைக்கப்படுமாம் ரூ. 5 கோடி இரயில்வே தொழிலாளர் குடியிருப்பு வசதிக்கு செலவிடப்படுமாம்.

★

சேமிப்பு அதிகாரியின் தவிப்பு

என். ஜி. ஓ.-க்கள் திணறச் செய்தனர்

சென்னை, மே 20—

இன்று இங்கு நடைபெற்ற என்.ஜி ஓ-க்களின் மாநில மாநாட்டில் சென்னை தேசிய சேமிப்பு அதிகாரி கிருஷ்ணசாமி அய்யங்கார், 'என் ஜி ஓ-க்கள், அரசாங்கச் சேமிப்பு நிதியில் பணத்தைச் சேர்த்துவைக்க வேண்டும்' என்று வற்புறுத்திக் கூறியபோது, பெருத்த குழப்பம் ஏற்பட்டது.

"உனனுடைய அறிவுரை எங்கட்குத் தேவையில்லை; இனிச் சேமிப்புக்கு இடம் தரோம்" என்று பிரதிநிதிகள் பெருங்கூச்சல் எழுப்பினர்.

சேமிப்பு அதிகாரி தொடர்ந்து பேச முயலுகையில், சில என். ஜி. ஓ-க்கள் மேடைக்குச் சென்று ஒலிபெருக்கியை அப்புறப்படுத்தினர். சுமார் 5 நிமிடங்கள் வரையில் ஒரே குழப்பமாயிருந்தது. சேமிப்பு அதிகாரி மேற்கொண்டு பேச இயலாமல் அமர்ந்துவிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்

★

திருச்சியில், வள்ளுவர் நகரில், மே 17, 18, 19, 20-ம் நாட்களில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டின் இறுதி நாளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரமும் இங்கு தரப்பட்டுள்ளது :—

1. அனுதாபம்

1953-ம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தில், கலந்துகொண்டு அரசியலாரின் அடக்குமுறைக்கும், மாற்றுக் கட்சியினரின் வஞ்சகத்திற்கும் பலியாகி உயிர்நீத்தத் தோழர்களுக்கு இம்மாநாடு வீரவணக்கம் செலுத்திக்கொள்வதுடன், கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு மறைந்த தோழர்களுக்கும் இம்மாநாடு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

2. மே தின விடுமுறை

உலகப் பாட்டாளி மக்களின் உரிமைக்கு வித்திட்ட மகத்தான நாளாகிய மே தினத்தை, ஆண்டுதோறும் இந்தியத் துணைக்கண்டமெங்கிலுமுள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் பொது விடுமுறையாக ஆக்குமாறு இந்திய அரசியலார் அதிகாரபூர்வமான உத்திரவிடவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

—தலைவர்

3. கூட்டணித் தோழர்கள் மீதுள்ள வழக்குகள்

தமிழ் மக்களின் சர்வக்கட்சிக் கூட்டணி, கடந்த பிப். 20-ம் நாளன்று, மாநில புனரமைப்புப் பிரச்சினையில் தமிழர்களின் கருத்தை வலியுறுத்துவதற்காக மிக அமைதியான முறையில் பொது வேலை நிறுத்தம் நடத்தியும், சில இடங்களில் போலீஸ் அத்துமீறி அனாவசியமாக மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி அடக்குமுறையை ஏவிவிட்டு மக்களை வருத்தியதை இம்மாநாடு கண்டிப்பதுடன், இது சம்பந்தமாக கடலூர், தம்மம்பட்டி, கள்ளக்குறிச்சி, தேவாரம், கோம்பை, பண்ணைபுரம் ஆகிய இடங்களில் பல தோழர்களின் மீதும் தொடர்ந்துள்ள வழக்குகளைச் சர்க்கார் வாபஸ் பெறவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

—தலைவர்

4. விடுதலை பெற்ற நாடுகட்கு வாழ்த்து

அண்மையில் அன்னிய ஆதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலை பெற்ற வியட்னாம், மலேயா, மொராக்கோ முதலிய நாடுகட்கு இம்மாநாடு மனமார்ந்த வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது

மேலும், ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் அன்னிய ஆதிபத்தியத்தை எதிர்த்தும், உலகெங்கும் ஆதிக்கக்காரர்களின் இனவெறியைக் கண்டித்தும், மனித உரிமைகட்காக நடைபெறும் கிளர்ச்சிகட்கு இம்மாநாடு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

—ஆர். எஸ். பாண்டியன்,
—க. அறிவழகன்

5. இந்தியாவே, காமன்வெல்த்தை விட்டு வெளியேறுக!

'காமன்வெல்த்'தில் உறுப்பினராயுள்ள இந்தியா, அதிலுள்ள மற்ற நாடுகள் கடைப்பிடிக்கும் வெள்ளை நிற வெறித் திட்டங்களையும், அவைகள் இந்திய உபகண்ட மக்கட்கு எதிராக எடுக்கும் எதிர் நடவடிக்கைகளையும் ஒரு சிறிதும் தடுக்க முடியாமல், மேற்படி அமைப்புடன் இந்திய யூனியன் ஒரு அங்கமாக உறுப்பினராயிருப்பது, தன்மானக் குறைவு என்று இம்மாநாடு கருதுவதுடன், 'காமன்வெல்த்' நாடுகளின் மேற்படி தவறான போக்குகளைக் கண்டிக்கும் அறிகுறியாகக் 'காமன்வெல்த்'தை விட்டு இந்தியா உடனே வெளியேறிவிட வேண்டுமெனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—தில்லை - வில்லாளன்
—வி. எஸ். கோவிந்தராசன்

6. காஷ்மீர் பிரச்சினையில் முடிவு காணுக!

கடந்த ஏழு ஆண்டுகளாக இந்திய மக்களின் வரிப் பணத்திலிருந்து பெரும் அளவுப் பணத்தைச் செலவிட்டும், மற்றும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டும், காஷ்மீர் பிரச்சினையில் ஒரு முடிவைக் காணமுடியாத குழப்ப நிலையை வளர்த்துவரும் இந்திய அரசியலாரின் போக்கைக் கண்டிப்பதுடன், விரைவில் இப்பிரச்சினையில் ஒரு முடிவு காணுமாறு இந்திய அரசியலாரை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—எஸ். எஸ். தென்னரசு,
—குளித்தலை - முத்துகிருஷ்ணன்

7. இலங்கை வாழ் தமிழ் மக்கள் நிலை

இலங்கை வாழ் திராவிட மக்களுக்கு நியாயமான குடியுரிமையை வழங்க, இலங்கையின் புதிய சர்க்காராவது ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்வதுடன், இந்திய அரசியலாரும் அதற்கான முயற்சிகளில் உடனடியாக ஈடுபட வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

(அ) இலங்கை சர்க்கார் தமிழ் மொழியை ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்க மறுத்தமை கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எவ்வித ஊறும் நேரா வண்ணம், தக்க பாதுகாப்பு அளிக்குமாறு இலங்கை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலனுக்காகப் பாடுபட்டுவரும் தமிழர் இயக்கக் கோரிக்கைகளை மனமார வரவேற்பதோடு, அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று, புதிதாகப் பதவி ஏற்றுள்ள இலங்கை அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(இ) தமிழரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்காக, இலங்கை ஹைகமிஷனர் பதவிக்கு ஒரு தமிழரையே நியமிக்க வேண்டும் என்று சர்க்காரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—இலங்கை தம்பித்துரை
— ,, எஸ்.எஸ்.எம். சுப்பிரமணியம்
—முத்துப்பேட்டை தர்மலிங்கம்

8. ஆயுத பரிசோதனைகளை அறவே கைவிடுக

இரண்டாம் போருக்குப் பிறகு கடந்த பத்து ஆண்டுகளில், உலக அரசுகள், குறிப்பாக வல்லரசுகள் இருமுனைகளாகப் பிரிந்து நின்று, பலவித அமைப்புகளின் பேரால் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டு வருவது, உலக சமாதானத்திற்குப் பெருங்கேடு விளைவிக்கும் என்பதையறிந்து இம்மாநாடு மிகவும் கவலையுறுகிறது.

இவ்வித இராணுவ ஒப்பந்தங்களுக்காக விரயமாக்கப்படும் ஏராளமான பணமும், பலமும், உலக மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களில் பயன்படுத்தும் முயற்சிகளிலும், உலக அரசுகளனைத்தும் ஒன்று சேரும் வகையிலும், உலக அரங்கில். இந்திய அரசியலார் பெற்றுள்ள செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று இந்திய அரசியலாரைக் கேட்டுக்கொள்வதுடன், உலகிற்கே பேராபத்தை விளைவிக்குமென உலகப் பெரும் விஞ்ஞானிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் அணு, நீர்வளி ஆயுதப் பரிசோதனைகளை அறவே கைவிடுமாறு வல்லரசுகள் அனைத்தையும் வற்புறுத்துவதுடன், இந்திய அரசாங்கத்தையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ.
—வி. சண்முகநாதன்

9. இரண்டாவது திட்டத்திலும் திராவிடம் வஞ்சிக்கப்படுவதா?

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வடநாட்டின் ஓரவஞ்சனை விளக்கப்பட்டிருந்தும் இந்திய அரசியலார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், திராவிடத்தைப் புறக்கணிக்கும் வகையில், கனரகத் தொழில்கள், மின்சாரத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவைகளை வடநாட்டிலேயே துவக்கத் திட்டமிட்டிருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(அ) மூலப் பொருள்கள் கிடைக்கவில்லையென்ற காரணத்தைக் காட்டி தொழில் துறையில் திராவிடத்தைப் பின் தங்க வைத்திருக்கும் அநீதியைப் போக்க, மூலப் பொருள்களின் உதவியின்றியே துவக்கப்படக்கூடிய பல தொழில் திட்டங்களையாகிலும் திராவிடத்திலேயே துவக்க வேண்டுமென்று வலியுறுத்துவதுடன், திராவிடத்தில் புதைந்துகிடக்கும் இயற்கைக் கனிப் பொருள்களின் அளவுகளையும், அதன் வாயிலாக அமைக்கப்படக்கூடிய தொழில்களைப் பற்றியும், ஆராய, குழு ஒன்றை நிறுவுமாறு அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

—ஈ. ஆர். கிருஷ்ணன்
—சிற்றுளி-சுப்பிரமணியம்

10. தொழிற்சாலைகளும் பாங்கிகளும் தேசியமயமாக வேண்டும்

அண்மையில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களைத் தேசியமயமாக்கிய அரசியலாரின் முடிவை இம்மாநாடு வரவேற்பதுடன், இதைத் தொடர்ந்து தனிப்பட்டோர் வசமுள்ள வாழ்க்கைக்கு இன்றியமையாப் பெருந்தொழிற்சாலைகளையும், பாங்கிகளையும் தேசியமயமாக்கி, அந்த நிறுவனங்களின் சொத்துக்களையும், வருவாய்களையும் அந்தந்த மாநிலங்களிலேயே பயன்படுத்திக்கொள்ள வேண்டுவது அவசியமென்பதை இம்மாநாடு அரசியலாருக்கு எடுத்துக்காட்டி அதற்காவன செய்யுமாறும் வலியுறுத்துகிறது.

—கோவை-செழியன்
—என். கிட்டப்பா
—மதுரை-சந்தானம்

11. ஒருமுனை விற்பனைவரி

இப்போது இருந்துவருகிற விற்பனை வரியானது பொதுவாக ஏழை பாட்டாளி மக்களையும், விவசாய மக்களையுமே பெரிதும் பாதிப்பதாலும், மேலும் வியாபாரிகள் இதனால் சொல்ல முடியாத பல தொல்லைகளுக்கு ஆளாகவேண்டியிருப்பதாலும், பல கட்ட விற்பனை வரியை ரத்து செய்துவிட்டு, ஒருமுனை விற்பனை வரியை உடனடியாக சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

—எஸ். ஏ. இராசமாணிக்கம்
—இளமுருகு

12. என். ஜி. ஓ.-க்கள் நிலையை உயர்த்துக!

இந்திய அரசியலாரின் நேரடியான நிர்வாகத்தின்கீழ்ப் பணிபுரியும் 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்கட்கும், கடைநிலை ஊழியர்கட்கும் கொடுத்துவரும் சம்பளம், பஞ்சப்படி, வீட்டுவாடகை முதலியவற்றைப் போலவே, சென்னை அரசியலாரின் நிர்வாகத்தின்கீழ்ப் பணிபுரியும் 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்கட்கும், கடைநிலை ஊழியர்கட்கும், சம்பளம் பஞ்சப்படி, வீட்டுவாடகை முதலிய ஊதியங்களைச் சென்னை அரசியலார் உடனடியாகக் கொடுக்கவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

சென்னை 'கெஜட்' பதிவற்ற அலுவலாளர்களின் சங்கம், ஊதியம் உயர எடுத்திருக்கும் முயற்சிகள் வெற்றியுறுவதற்கான முழு ஆதரவும் தருவதென இமமாநாடு தீர்மானிக்கிறது.

—எம். எஸ். இராமசாமி
—பாலகுருசாமி

13. பள்ளிக் கல்வித் திட்டம்

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கீழ்க்கண்ட முறைகளை மேற்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று, சென்னைஅரசியலாரை, இம்மாநாடு வற்புறுத்துகிறது :—

(அ) குழந்தைகளின் பள்ளி செல்லும் வயது ஐந்து என்றிருப்பதை ஆறு என மாற்றயிருக்கும் அரசியலாரின் போக்கைக் கண்டிக்கிறது.

(ஆ) உயர்தர ஆரம்பக் கல்வியின் காலம் இப்போதிருப்பதைப் போலவே எட்டு ஆண்டுகளாகவே இருத்தல் வேண்டுமென்பதுடன் உயர்நிலை வகுப்பு வரை இலவசமாகக் கல்வி பயிற்றுவிக்க வேண்டும் ;

(இ) உயர்தர ஆரம்பப் பள்ளியில் எட்டாவது வகுப்புத் தேர்ச்சி பெறும் மாணவன், நேரே உயர்நிலைப் பள்ளியில், நான்காம் படிவத்தில் சேருவதற்கான வாய்ப்பினைப் பெறுதல் வேண்டும் ;

(உ) ஆரம்பப் பள்ளியில் வட்டார மொழி கட்டாய மொழியாகவும், உயர்தர ஆரம்பப் பள்ளியில் வட்டார மொழியோடு ஆங்கில மொழி — இரண்டாவது கட்டாய மொழியாகவும் இருக்க வேண்டும். வேறு எந்த மொழியையும், எந்த நிலையிலும் கட்டாயப்படுத்துதல் கூடாது.

(ஊ) ஆரம்பப் பள்ளியில் எந்த விதக் கைத்தொழிலும் கற்பிக்க வேண்டிய தேவையில்லை. நாட்டுக்குத் தேவைப்படும் குடிசைத் தொழிலையோ அல்லது பொறித் தொழிலையோ முதல் படிவத்திலிருந்து, பள்ளியிலேயே கற்றுக்கொடுக்க முயலலாம்.

(எ) எந்த நிலையிலும் 'ஷிப்டு' முறை கூடாது.

(7) மூன்று வயதுக்குமேல் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் எல்லோருக்கும் குழந்தை நலப் பள்ளி (Nursery School) கட்டாயமாக விரைவில் ஏற்படுத்த வேண்டும்.

—ப. கண்ணன்
—என் ஜீவரத்தினம்
—திருப்பத்தூர் இராமச்சந்திரன்

14. சிலரிடம் முடங்கிக் கிடக்கும் நிலம்...!

நிலச் சீர்திருத்தம் செய்யப் போவதாகக் கூறி, அதனை நடைமுறைக்குக் கொண்டுவர முற்படாமல், காலங்கடத்தி வீண் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அரசியலாரின் போக்கை வன்மையாகக் கண்டிப்பதுடன், தனிப்பட்ட நிலப் பிரபுக்கள், மடாதிபதிகள், கோயில்கள் ஆகியவற்றின் ஆதிக்கத்தின் கீழ் முடங்கிக் கிடக்கும் பெரும் அளவு நிலங்களை, அவர்களின் உரிமையிலிருந்து விடுவித்து, விவசாயிகட்கே மிகுதியும் பயன்தரத்தக்க அனுபவ உரிமை வகையில், கூட்டுறவு முறையில்

(4-ம் பக்கம் பார்க்க)

'தமிழ் மொழி' காக்க நேரடி நடவடிக்கை

ஐ. நா. சபைக்கும் பிரச்சினை செல்லலாம்

கொழும்பு, மே 19—

இலங்கை அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எதிர்த்துப் போராடுவது என்று நேற்றுக் கொழும்புவில் இலங்கை பெடரல் கட்சியின் சார்பில் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இலங்கையில் தமிழ்ப்பேசும் பகுதிகளில் தமிழர்களின் தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காப்பதற்கு நேரடி நடவடிக்கை எடுப்பதற்கான திட்டத்தை வகுப்பதற்கு இலங்கை வாழ் தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்காக ஊர்வலங்கள் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

சிங்கள மொழியோடு தமிழ் மொழியும் சம நிலையில் பேணப்படுவதற்கு, தேவைப்படுமானால் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இப்பிரச்சினையைக் கொண்டுபோவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையே இலங்கைவாழ் தமிழர்களை, சிங்களமொழியே அரசாங்க மொழி என்று வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படுவதை எதிர்க்குமாறு கூட்டம் கேட்டுக் கொண்டது.

அலுவல்களில் இருக்கும் தமிழர்களை அரசாங்கத்தின் புதிய மொழிக் கொள்கையை எதிர்க்கும்படியும், தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் சிங்கள மொழி கற்க அனுமதிக்கக் கூடாது என்றும் கூட்டம் கேட்டுக்கொண்டது.

இலங்கைப் பெடரல் கட்சித் தலைவர் திரு எஸ். ஜெ. வி செல்வநாயகமும், திரு. சி. சுந்தரலிங்கமும் கூட்டத்தில் பேசியவர்களில் குறிப்பிடத்தக்கவராவர்.

மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயத் துறையில் உடனடியாகத் திருத்தி அமைக்க வேண்டுமென்பதுடன், நியாயவார மசோதாவை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—பொன். சொக்கலிங்கம்
—பொன்னாச்சி இராமாநுசம்
—விருத்தாசலம் முனுசாமி

15. தீப்பெட்டி, சவ்வரிசித் தொழில் பாதுகாக்கப்பட வேண்டும்

திராவிடத்தில் முக்கியக் குடிசைத் தொழிலாகவும், எண்ணற்ற ஏழைக் குடும்பங்களின் அவலநிலையை ஓரளவு தீர்க்கப் பயன்படுவதுமான தீப்பெட்டித் தொழில் உற்பத்தி, மத்திய சர்க்கார் வடநாட்டுப் பெரும் முதலாளிகளுக்குக் காட்டும் சலுகையாலும், உத்திரவாலும் நசிந்துவருவதால் திராவிடத்தில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டித் தொழிலுக்கு அரசியலார் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், சேலம் மாவட்டத்தில் சவ்வரிசித் தொழிலுக்கும் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—க. நெடுஞ்சோழன்
—பொன்மலை-பராங்குசம்

16. விவசாயத்தில் மின்சாரப் பங்கீடு

நம் நாட்டிலுள்ள விவசாயிகளில் பெரும்பாலோர் குறைந்த அளவு நிலமுள்ளவர்களாதலால் அவர்களின் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், அரசியலார் மின்சாரப் பங்கீட்டை ஒப்பந்தத் தொகை நிர்ணயிக்காமல், நிபந்தனையற்ற முறையில் ஒப்பந்தத் தொகை நிர்ணயிக்காமல், விவசாயிகள், தாங்கள் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு மட்டுமே அதற்கான தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது.

—நாமக்கல்-பெருமாள்

17. கைத்தறிப் பிரச்சினை

கைத்தறித் தொழிலையே நம்பி வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு—இந்தத் தலைமுறையினருக்கு வாழ்வளிக்கும் வகையில், கரை போட்ட வேட்டிகளையும், சேலைகளையும் தயாரிப்பதைக் கைத்தறிக்கென்றே ஒதுக்கிவிட வேண்டுமென்று அரசியலாரை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

கைத்தறி மூலம் தயாரிக்கப்படும் லுங்கி, கைக்குட்டை போன்றவைகளை இலங்கைக்கும், மற்றும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் உத்தரவுகளை இந்திய அரசியலார் அடிக்கடி மாற்றுவதால், வடநாட்டிலுள்ள முதலாளிகளுக்கும், அன்னிய ஏஜெண்டுகளுக்கும் அனுகூலமும், திராவிடத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், நெசவுத் தொழிலுக்குபெருங்கேடும்விளைவிப்பதால், இனியாகிலும் இந்திய அரசியலார் தங்கள் போக்கினை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

நெசவாளர்களுக்குப் போதிய வேலையும், வசதியும் இல்லாது அவதியுற்றிருக்கும் இந்நிலையில், விசைத் தறித் திட்டத்தை "வடமுறைக்குக் கொண்டுவருவது கைத்தறி நெசவாளர்களுக்குப் பெருத்த அளவில் பாதகம் ஏற்படுமாதலால், அவர்களின் வாழ்வில் நல்லதோர் சூழ்நிலை அமையும்வரை விசைத் தறித் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று இம்மாநாடு அரசியலாரை வலியுறுத்துகிறது.

—குன்றத்தூர் சம்பந்தம்
—அ. உசிலைத்தம்பி

18. நாகர் நாடு தனிநாடாகும் பிரச்சினை

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து விடுதலை பெற்றுத் தனிநாடு காண நாகர்கள் நடத்தும் கிளர்ச்சிகளை ஜனநாயக முறையில் அணுகாமல், பலாத்காரச் செயல் என்று காரணம் காட்டி, அந்த எழுச்சியை அடக்கி ஒடுக்கிவிடலாமென்ற இந்திய அரசியலாரின் ஆதிபத்திய எண்ணத்தை இம்மாநாடு கண்டிப்பதுடன், நாகர்களின் தனி நாடு கோரிக்கையை ஜனநாயக முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென இம்மாநாடு இந்திய அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

—சி. வி. எம். அண்ணாமலை
—வி. முனுசாமி

19. மராட்டியரின் அறப் போருக்குப் பாராட்டு

பம்பாய் நகரம், மராட்டிய மண்டலத்தில் இணைந்திருக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையைப் புறக்கணித்தும், அதற்காகப் போராடிவரும் மராட்டிய மக்களைக் கடுமையான அடக்குமுறையால் கொடுமைப்படுத்தியும்வரும் இந்திய அரசியலாரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், மராட்டிய மக்களின் இந்த அறப்போர் வெற்றியுற வேண்டுமென்று இம்மாநாடு விரும்புவதுடன், அறப்போரில் மராட்டிய மக்கள் காட்டிவரும் வீரத்தையும், மன உறுதியையும் இம்மாநாடு பாராட்டுகிறது.

—திண்டுக்கல் சமதர்மம்
—காஞ்சி இராசகோபால்
—சங்கரன்கோயில் சுப்பிரமணியம்

20. கல்லக்குடி பெயர் மாற்றம்

திருச்சி மாவட்டத்தில், கல்லக்குடியிலுள்ள புகைவண்டி நிலையத்திற்கு, டால்மியாபுரம் என வடநாட்டு முதலாளி ஒருவரைப் பெருமைப்படுத்தும் வகையில் பெயரிட்டிருப்பதைத் தமிழ் மக்கள் ஒருமுகமாகக் கண்டித்தும் கிளர்ச்சி செய்தும் இருப்பதை, மத்திய சர்க்காரும், சென்னை சர்க்காரும் அலட்சியப்படுத்திவரும் ஜனநாயக விரோதமான போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

விரைவில் இப்பிரச்சினையில் மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்கு உடன்பாடான வகையில் சர்க்காரின் போக்கு மாருவிடில், திராவிட முன்னேற்றக் கழகம் மேலும் தீவிரமாகக் கிளர்ச்சியில் ஈடுபட நேரிடும் என்பதைச் சர்க்காருக்கு இம்மாநாடு நினைவுபடுத்துகிறது.

—சி. டி. தண்டபாணி
—கவிஞர் கண்ணதாசன்
—முல்லை-சத்தி
—சி. ஆர். பாலசுந்தரம்

21. சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்குதல்

சுயமரியாதைக் கொள்கை அடிப்படையில் இதுவரை நடைபெற்றுள்ள திருமணங்களையும், இனி நடைபெறவிருக்கும் திருமணங்களையும் சட்டப் பூர்வமாக அனுமதிக்கும்வகையில், அரசியலார், சட்டத்தில் தக்க திருத்தம் செய்யவேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—ஏ எல். சி. கிருஷ்ணசாமி
—கே. எம். கண்ணபிரான்
—முல்லை வடிவேலு

22. கவர்னர் சம்பளம்

இந்தியத் துணைக் கண்டம் பிரிட்டிஷ் ஆட்சிப் பிடிப்பிலிருந்து விடுதலை பெற்றவுடன் ஜனநாயக அரசியல் முறைக்குச் சிறிதும் ஒவ்வாத கவர்னர் பதவி ஒழிக்கப்படும் என்று அளித்த வாக்குறுதியைக் காங்கிரஸ் ஆட்சியினர் காப்பாற்ருமல், கவர்னர் பதவிகளை நீடித்து வருவது கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துகிறது.

(அ) டில்லி ஏகாதிபத்தியத்தின் சின்னமாய் விளங்கும் கவர்னர் பதவியை நீடிக்கச் செய்து, சென்னை மக்களின் வரிப் பணத்திலிருந்து ஆண்டுதோறும் ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய்களைப் பாழாக்கி வருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், அப்பதவி உடனடியாக அகற்றப்படுதல் வேண்டுமெனவும் அரசியலாரை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

—தில்லை - வில்லாளன்
—கே. வி. கே. சாமி

(தீர்மானங்கள் முடியவில்லை. தொடர்ந்து நாளை வெளிவரும்.)

தாயகத்தை மீட்க! திராவிடருக்கு

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆணித்தரமான கருத்துக்களை அவர் எடுத்துரைத்த முறை, கூடியிருந்த மக்கள் உள்ளததில் பசுமரத்தாணிபோல் பதிந்தது!

கேள்விக்குறியாக விளங்கும் எதிர்காலத்தையும் மக்கள் முன் நிறுத்தி, அந்த எதிர்காலம், கழகத்திற்குத்தான்—கழகத்தின் கையில்தான் இருக்கப்போகிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டினர், பொதுச்செயலாளர்.

கழகம், கண்ணீரோடு பிறந்து, எதிர்ப்புகளிடையேயும் ஓங்கி வளர்ந்து, தாயக விடுதலைக்காகத் தோள்தட்டும் வலிமையைப் பெற்று விளங்குவதை அவர், பொதுச்செயலாளர் என்ற முறையில் விளக்கிய சீரியமுறை, இலட்சோபலட்சம் மக்களுக்கும் மனமகிழ்வைத் தந்தது.

"எஃகு உள்ளமும், ஏக்கமுத்தும், தடைபடாக் குருதி ஓட்டமும், தாயகப் பற்றும், விடுதலை வேட்கையும், நெஞ்சு உறுதியும் கொண்ட வீரரே! திராவிடரே! தாயகத்தை மீட்க, நாட்டவருக்கு நல்வாழ்வு நல்க, விரைந்து வாரீர்! அடிமை நிலை ஒழிப்போம! இழந்த வாழ்வைப் பெறுவோம! இன்புறுவோம், வாரீர்!"

என்று, அவர் கூடியிருந்த மக்களை அழைத்தபோது, எழுந்த கையொலிய, தாயகத்தை அடிமை கொண்டுள்ள வெறியர்களுக்குத் தாப்படும அறைகூவலாய் அமைந்தது!

அவரின் தலைமைப் பேருரை தொடர்ந்து வெளிவரும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருமண அழைப்பு

பேரன்புடையீர், வணக்கம்!

23—5—56 புதன் மாலை 4-மணியளவில், சென்னை—இராயப்பேட்டை லாயிட்ஸ் ரோடு, 155-வது இல்லத்தில், அண்ணு அவர்கள் தலைமையில், தோழியர் சத்தியபாமா (எம். ஜி. சக்கரபாணி அவர்களின் குமாரி)—தோழர் ஏ. இராசன் (சங்கரநாராயணன் அவர்களின் குமாரன) ஆகிய இருவரும வாழ்க்கைத் துணைவர்களாகும் 'திருமண விழா' நடைபெறவிருப்பதால், தாங்கள் இந்த விழாவிற்கு வருகை தந்து, விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேம்.

நிகழ்ச்சி நிரல்: பிற்பகல் 4-மணிக்கு தேநீர் விருந்து; 5-மணிக்கு திருமணம்; நாவலர் இரா. நெடுஞ்செழியன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்குவர்; 6-30 மணிக்கு சங்கீதவாணி எம். எல். வசந்தகுமாரி குழுவினரின் இன்னிசை விருந்து.

தங்கள்,
எம். ஜி. சக்கரபாணி
எம். ஜி. இராமச்சந்திரன்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'இந்தியாவிலேயே பெருமை வாய்ந்த மொழி தமிழ் மொழிதான்'

'முதலிடமும் அதற்கே உரித்தானது'

வினேபா பாவேயின் கருத்து

"தமிழ் மொழியில் இருப்பன போன்று வேறு மொழிகளில் இலக்கியக் கருவூலங்கள் இருக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை. உயர்ந்த எண்ணங்கள், கருத்தை வெளியிடுதல் ஆகியவற்றை நோக்குகையில் இந்தியாவிலேயே தமிழ் மொழிதான் முதலிடம் வகிக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

"இப்போதுள்ள இந்திய மொழிகளில் 'வங்காள மொழி'தான் முதலிடம் பெறத்தக்கது என்று தோன்றக்கூடும்; ஆனல், மொழிகளின் பல்வேறுபட்ட அம்சங்களையும் மொத்தத்தில் சிந்தித்துப் பார்க்கையில், இந்தியாவிலேயே தமிழ் மொழிதான் மிக உயர்ந்த மொழியாகும்,"

என்று, வினேபாபாவே, தட்சிணப் பாரத இந்தி பிரச்சார சபையில் இன்று காலை நடைபெற்ற கூட்டத்தில் பேசினர்.

தமிழ் மொழியின் இலக்கியச் சுவையைத் தாம் ஏற்கனவே நுகர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் திருக்குறளைப் பற்றிப் பேசுகையில், திருக்குறள் தம் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது என்றும், திருக்குறளில் உள்ள அதிகாரங்களில் சிலவற்றை அவர் மனப்பாடம் செய்துள்ளதாகவும், திருக்குறள் ஒரு பழங்கால இலக்கியமாகத் திகழ அல்லது பல இலட்சக்கணக்கான மக்களால் பாராட்டப்படுவதற்காகவோ தாம் திருக்குறளைப் போற்றவில்லை என்றும், சுருங்கிய முறையில் பரந்த—உயர்ந்த கருத்துக்களைத் தெளிவாக எடுத்து வழங்கும் பாக்களைக் கொண்டது என்பதாலேயே தாம் திருக்குறளைப் பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாட்சியத்தைப் பசு சாப்பிட்டது!

இலக்குமணபுரி, மே 17—

பாங்கியாளா ஒருவர் கொலை சம்பந்தமாகப் பிரேதப் பரிசோதனை செய்து தயாரிக்கப்பட்ட அறிக்கையை வைத்தியசாலையிலிருந்து வேலைக்காரன் சிவில் சாஜன் வீட்டிற்கு எடுத்துச் சென்ருனும்! அவ்வறிக்கையை அவன் தன் கோட்டுப் பையில் வைத்திருந்தானும். போகும் வழியில் மழை பொழியத் தொடங்கவே வீதியின் பக்கத்திலிருந்த ஒரு கொட்டகையில் மழை விடுமவரையில் தங்கியிருந்தானும். பின்னர், அவ்வறிக்கையை அங்கேயே தவறுதலாகப் போட்டுச் சென்று விட்டானும். உடனே அதைப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு பசு தின்று விட்டதாம்.

இத்தகவலை, உத்திரப் பிரதேச சிறைச்சாலை துணை மந்திரி சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

மறைவு

குத்தாலம், மே 20—

18—5—56 மாலை திருவாவடுதுறையிலுள்ள தமது இல்லத்தில், நாதசுர இசைப் பெரும் புலவர் டி. என். இராசரத்தினம் அவர்களின் மருமகனும், திருவாவடுதுறை ஆதீன பிரதம நாதசுர வித்துவானுமான 'காக்காயி என்கிற டி. என். ஆர். நடராஜ சுந்தரம் (பிள்ளை) அவர்கள் இயற்கை யெய்தினர் என அறிந்து மிக வருந்துகிறேம். அன்னாரின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபம உரித்தாகுக.

—ஆ-ர்.

சென்னையில் இல்லை—மத்திய பாரத்தில்!

அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு

இந்தூர், மே 20—

மத்திய பாரத் மாநிலத்தின் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனுல் 80,000 அலுவலர்கள் பயனடைவார்கள். இதற்கு ஆண்டுதோறும் 1·5 கோடி ரூபாய் அதிகமாகத் தேவைப்படும் என்று தெரிகிறது. 1955-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்தே சம்பள உயர்வு அளிக்கப்படும்.

லண்டன், மே 20—

சிங்கப்பூர் முதலமைச்சர்டேவிட் மார்ஷல் அவர்களை டில்லிக்கு வருகை தரும்படி இந்தியப் பேரரசினர் அழைத்துள்ளனர், என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தூளை நகர இளைஞர் கழகம்

23—5—56 மாலை 6½ மணிக்கு, அமெரிக்கச் செய்தி இலாகாவினரால் சுகாதாரப் படக்காட்சி ஒன்று தூளை, தொட்டிக்கலை குமரப்ப முதலி தெருவிலுள்ள இந்து யூனியன் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ